SHANKAR
IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்
ஆகஸ்ட் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040
**Contact : 044-43533445 | 044-45543082.**
**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# ஆகஸ்டு - 2018

## தமிழ்நாடு

1) அரசியலமைப்புச் சட்ட விதி 217-ன் படி நீதிபதி **விஜயா கமலேஷ் தகில் ரமணி** மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 2018 ஆகஸ்டு 12 அன்று நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சுதந்திரத்துக்குப் பின், பொறுப்பேற்ற மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மூன்றாவது பெண் மற்றும் 30-வது தலைமை நீதிபதி ஆவார்.

2) தமிழகத்தின் நீண்ட கால முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான **டாக்டர்.மு.கருணாநிதி அவர்கள் 2018 ஆகஸ்டு 7** அன்று தனது 94வது வயதில் இயற்கை எய்தினார். மேலும் கலைஞர் கருணாநிதியின் நினைவாக பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தில் அவரின் பெயரில் தமிழ் இருக்கை (Tamil Chair) ஒன்று அமைக்கப்படும் என்று பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

3) நாட்டின் 12-வது சுதந்திர தினத்தன்று (15.08.2018) வழங்கப்பட்ட **தமிழக அரசின் விருதுகள்:**

| | |
|---|---|
| ➢ **டாக்டர். A.P.J. அப்துல் கலாம் விருது** | நடிகர் அஜித் குமார் ஆலோசகராக இருந்து வழி நடத்திய **தக்ஷா குழுவுக்கு** (Daksha Team) இவ்விருது வழங்கப்பட்டது. இக்குழுவானது அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Space Research Centre) கீழ் செயல்படுவதாகும். |
| ➢ **கல்பனா சாவ்லா விருது** | இவ்விருதானது சிறுத்தைப் புலியிடம் இருந்து தனது மகளைக் காப்பாற்றிய பெரிய கல்லாரைச் சேர்ந்த **முத்துக்குமாரிக்கு** வழங்கப்பட்டது. |
| ➢ **முதலமைச்சரின் சிறந்த ஆளுகைக்கான விருது** (CM's Good Governance Award) | தமிழக பத்திரப் பதிவுத்துறையின் **ஸ்டார் 2.0 (Project Star 2.0)** திட்டத்திற்கு இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது. |
| ➢ **சிறந்த மாநகராட்சிக்கான விருது** | திருப்பூர் |
| ➢ **சிறந்த நகராட்சிக்கான விருது** | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் |
| ➢ **சிறந்த ஊராட்சிக்கான விருது** | ஜலகண்டபுரம், சேலம் மாவட்டம் |

4) கோயம்புத்தூர் மாவட்டம் மலுமிச்சம்பட்டி கிராமத்தில் உள்ள மதுக்கரை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியையான **திருமதி.சதி** அவர்களுக்கு

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

2017-ம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதானது (National Best Teacher Award 2017) வழங்கப்பட்டுள்ளது.

5) தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் (Tamilnadu Physical Education and Sports University) முதல் பெண் துணை வேந்தராக **டாக்டர்.ஷீலா ஸ்டீபன்** (Dr.Shelia Stephen) நியமிக்கப்பட்டுள்ளார்.

6) **“வன மரபியல் வள மரப் பூங்கா”** (Forest Genetic Resources Tree Park) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள **வண்டலூரில்** அமைக்கப்பட்டுள்ளது.

7) தமிழக அரசானது இரு சக்கர வாகனம் ஓட்டும் போது, வாகனம் ஓட்டுபவர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணம் செய்பவர் (Pillion Rider) ஆகிய இருவரும் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற உத்தரவினை **2018 ஆகஸ்டு 24** அன்று பிறப்பித்தது.

8) தமிழக முதல்வர் ‘பிளாஸ்டிக் மாசுபாடு இல்லாத தமிழகம்’ (Plastic Pollution Free Tamilnadu) என்ற பிரச்சாரத்தினை 2018 ஆகஸ்டு 23 அன்று தொடங்கி வைத்தார். மேலும் இப்பிரச்சாரத்திற்கான இலச்சினையையும் வலைதளத்தையும் தொடங்கி வைத்தார். (இப்பிரச்சாரத்திற்கான தூதுவர்கள் : நடிகர்கள் சூர்யா, கார்த்தி, விவேக் மற்றும் நடிகை ஜோதிகா ஆகியோர் ஆவர்.)

9) ‘சர்வதேச யோகா தின திருவிழாவானது’ (World Yoga Day Festival 2018) 2018 ஆகஸ்டு 28 அன்று **மாமல்லபுரத்தில்** கொண்டாடப்பட்டது.

10) உலகின் மிகப்பெரிய எண்ணெய்க் கப்பலான (Crude Oil Ship) **M D நியூ டைமண்ட்** (M D New Diamond) முதல் முறையாக சென்னை துறைமுகத்தை வந்தடைந்தது.

11) **‘மாணவர்களுக்கான தமிழக முதலமைச்சரின் மின் ஆளுகை விருதானது’** (TN Chief Minister’s Award for Excellence in e-Governance for Students) கல்லூரி மாணவர்களிடையே மின் ஆளுகை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் மின் ஆளுகையில் மென்பொருள் பயன்பாடுகளில் புத்தாக்கத்தினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

12) தமிழக அரசானது **“மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030”**-ஐ (State Disaster Management Perspective Plan 2018-2030) **2018 ஆகஸ்டு 28** அன்று வெளியிட்டது. இத்திட்டமானது ‘வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையினால்’ (Revenue and Disaster Management Department) தயாரிக்கப்பட்டதாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## *தேசம்*

1) **இராஜஸ்தானின்** பைகானர் மாவட்டத்திலுள்ள **நப்பசாரில்** (Napasar, Bikaner District) **நாட்டிலேயே முதல் முறையாக பசுக்களுக்கான சரணாயமானது** (1st cow sanctuary) அமைக்கப்பட்டுள்ளது.

2) கர்நாடக அரசு தொடங்கியுள்ள ஊரகத் தூய்மை மற்றும் சுகாதாரத்துக்கான பிரச்சாரமான **'ஸ்வச்சமேவ ஜெயதே'** (Swachhameva Jayate), அம்மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பேணுவதற்கான உறுதிப்பாட்டினை எடுக்க ஊக்குவிக்கிறது.

3) டெல்லி காவல்துறையானது நாட்டிலேயே முதன் முறையாக தீவிரவாதச் செயல்பாடுகளுக்கு எதிராக முழுவதும் பெண்களே அடங்கிய **'சிறப்பு ஆயுதங்கள் மற்றும் போர்த் தந்திரங்களுக்கான குழுவினை'** (India's first all-woman special weapons and Tactics - SWAT Team) அமைத்துள்ளது.

4) இந்தியாவின் முன்னாள் பிரதமரான **அடல் பிகாரி வாஜ்பாய்** (Atal Bihari Vajpayee) **2018 ஆகஸ்டு 16** அன்று இயற்கை எய்தினார்.

5) மறைந்த பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நினைவாக சத்தீஸ்கர் அரசானது தனது மாநிலத்தின் புதிய தலைவரான **'நயா ராய்ப்பூரின்'** (Naya Raipur) பெயரை **'அடல் நகர்'** என்று பெயர் மாற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஆகஸ்டு 21 அன்று அறிவித்துள்ளது.

6) மூத்த தலைவரும் முன்னாள் மக்களவை சபாநாயகருமான **சோம்நாத் சாட்டர்ஜி** (Somnath Chatterjee) **2018 ஆகஸ்டு 13** அன்று கொல்கத்தாவில் இயற்கை எய்தினார்.

7) **பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்திற்கு** அரசியலமைப்புச் சட்ட அந்தஸ்து வழங்க வழி வகுக்கும் (National Commission for Background classes as a constitutional body) **123-வது** அரசியலமைப்புச் சட்ட மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

8) **இராஜஸ்தான்** மாநிலமானது நாட்டிலேயே முதலாவது மாநிலமாக **'தேசிய உயிரி எரிபொருள் கொள்கையை'** (National Biofuel Policy) நடைமுறைப்படுத்த உள்ளது.

9) மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது (Ministry of Commerce and Industry) புவிசார் குறியீட்டினைப் பெற்ற பொருட்களுக்குண்டான புதிய மூவர்ணம் கொண்ட **முத்திரையை** (tricolor logo for geographical indication certified Products) அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இந்த முத்திரையில் **'ஒப்பற்ற இந்தியாவின் விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள்'** (Invaluable Treasures of

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

Incredible India) என்ற 'வாசகம்' (tagline) இடம் பெற்றிருக்கும். இந்த முத்திரை மற்றும் வாசகத்தினை வடிவமைத்தவர்கள் பின்வருமாறு :-

- முத்திரை (logo) - **அத்ரி சாட்டர்ஜி** (Adri Chatterjee)
- வாசகம் (Tagline) - **அகஞ்சா திரிபாதி** (Akancha Tripathi)

10) மத்திய பிரதேசத்தின் ஜாபுவா மாவட்டத்தில் காணப்படும் கருமை நிற மாமிசம் கொண்ட **கடக்நாத் கோழிக்கும்** (Kadaknath Chicken, Jhabua District) தமிழ்நாட்டின் **'நாகர்கோவில் ஆலய நகைகளுக்கும்'** (Nagercoil Temple Jewels) புவிசார் குறியீட்டு அந்தஸ்து (Geographical Indication - tag) வழங்கப்பட்டுள்ளது.

11) தேவையற்ற சமயத்தில் பயன்படுத்தப்படும் ஒலி எழுப்பியினால் உண்டாகும் ஒலி மாசுபாடு மற்றும் அதனால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த இமாச்சலப் பிரதேச முதலமைச்சரான ஜெய் ராம் தாக்கூர் **'ஒலி எழுப்ப வேண்டாமே'** எனும் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தினையும் (Horn not ok awareness Campaign) **'ஷவர் நஹின்'** என்ற கைபேசிச் செயலியினையும் (Shaur Nahin Mobile App) அறிமுகப்படுத்தியுள்ளார்.

12) உலகிலேயே முதன் முறையாக **'அனல் மின்கல ஆலை'** (Thermal battery Plant) ஒன்றினை 'பாரத தனியார் ஆற்றல் சேகரிப்புத் தொழில்நுட்ப நிறுவனமானது' (Bharat Energy Storage Technology Private Limited) **ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதியில்** தொடங்கியுள்ளது.

13) **மேகாலயா** மாநிலத்தில் அலுவல் சார்ந்த பணிகளுக்கு திருமணப் பதிவுச் சான்றினைக் கட்டாயமாக்கும் சட்டமுன் வரைவுக்கு அம்மாநில அரசானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

14) ஆகஸ்டு புரட்சி என்று அழைக்கப்படும் (ஆகஸ்டு கிராந்தி அல்லது பாரத் சோதோ அந்தோலன்) வெள்ளையனே வெளியேறு (Quit India Movement) இயக்கத்தின் 70வது நினைவு தினமானது 2018 ஆகஸ்டு 8 அன்று அனுசரிக்கப்பட்டது.

15) சர்வதேச உயிர்க்கோளக் காப்பகப் பகுதிகளுக்கான வலையமைப்பில் (World Network of Biosphere Reserves) சிக்கிமின் கஞ்சன்ஜங்கா (Khangchendzonga) உயிர்க்கோளக் காப்பகப் பகுதியானது இணைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலிருந்து இவ்வலையமைப்பில் இணையும் 11வது காப்பகப் பகுதியாகும்.

16) ஆக்சிஸ் வங்கியானது (Axis Bank) நாட்டிலேயே முதன்முறையாக ஆதார் அடிப்படையிலான வங்கிப் பரிவர்த்தனைகளுக்கு **'கருவிழி ஊடுருவல் உறுதிப்பாட்டு வசதியினை'** (Iris Scan Authentication feature) ஏற்படுத்தியுள்ளது.

17) மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான (Union Minister for Electronics and Information Technology) ரவி சங்கர் பிரசாத் வடகிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்காக

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**'டிஜிட்டல் வடகிழக்கு தொலைநோக்குத் திட்டம் 2022'** - ஐத் (Digital North East Vision 2022) தொடங்கி வைத்துள்ளார்.

18) மத்திய இரயில்வே அமைச்சகமானது **இந்தியாவின் தூய்மையான இரயில் நிலையங்களைப்** பின்வருமாறு பட்டியலிட்டுள்ளது.

| | |
|---|---|
| **"A1" தர மதிப்பீடு**<br>("A1" Category Ranking) | ஜோத்பூர், இராஜஸ்தான்<br>(75 இரயில் நிலையங்களுள் முதலாவது இடம்) |
| **"A" தர மதிப்பீடு**<br>("A" Category Ranking) | மார்வார், இராஜஸ்தான்<br>(332 இரயில் நிலையங்களுள் முதலாவது இடம்) |
| **மண்டல தரவரிசை**<br>(Zonal Ranking) | வடமேற்கு இரயில்வே<br>(17 மண்டலங்களுள் முதலாவது இடம்) |

19) 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்த மகதாயி (அ) மன்டோவி நதி நீர்ப் பங்கீடு விவகாரத்தின் இறுதித் தீர்ப்பானது **'மகதாயி நதி நீர் விவகாரத் தீர்ப்பாயத்தினால்'** (Mahadayi Water Disputes Tribunal) வெளியிடப்பட்டது. இந்த மகதாயி நதி நீர் விவகாரமானது இந்நதி பாய்ந்தோடும் கோவா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களுக்கிடைப்பட்டதாகும்.

20) **2019-ம்** ஆண்டினை **'சர்வதேச சிறுதானியங்களுக்கான ஆண்டாக'** (International Year of Millets) அறிவிக்கக்கோரி இந்திய அரசானது ஐக்கிய நாடுகள் அவைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

21) மத்திய புவி அறிவியல் அமைச்சகமானது (Ministry of Earth Sciences) கேரளாவிலுள்ள **திருவனந்தபுரத்தில் 'புயல் முன்னறிவிப்பு மையம்'** (Cyclone Warning Centre) ஒன்றினையும் **கர்நாடகாவிலுள்ள மங்களூரில் C-கற்றை டாப்ளர் வானிலை ராடார்** (C-band Doppler Weather RADAR) ஒன்றினையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

22) நாட்டின் முதலாவது **'மாநிலங்களுக்கிடைப்பட்ட மின் செலுத்தும் அமைப்பானது'** (Inter State Transmission System) **குஜராத்தின் பூஜ்** (Bhuj, Gujarat) பகுதியிலுள்ள 126 MW மின் உற்பத்தித்திறன் கொண்ட காற்றாற்றல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதன் மூலம் செயல்பாட்டுக்கு வந்தது.

23) **மத்தியப் பிரதேச** மாநில வனத் துறையானது அம்மாநிலத்தின் சாகர் மாவட்டத்திலுள்ள நவுரதேகி சரணாலயத்தில் (Nauradehi Sanctuary) **'சிறுத்தைகள் மீள் அறிமுகத் திட்டத்தினைத்'** (Cheetah Reintroduction Project) தொடங்கி வைத்துள்ளது.

24) விமான ஊர்திக்கான எரிபொருளுடன் (aviation turbine fuel) ஜட்ரோஃபா விதைகளிலிருந்து பெறப்பட்ட எண்ணெய் கலந்த **நாட்டிலேயே முதலாவது உயிர் எரிபொருள் உதவியுடன் இயங்கும் விமானமானது** (Biofuel flight) **டேராடூனிலிருந்து டெல்லிக்கு** தனது முதல் பயணத்தை மேற்கொண்டது.

25) **அருணாச்சலப் பிரதேச** மாநில அரசானது பாக்கே-கெசாங் (Pakke-Kesang), லெபா ராடா (Lepa Rada) மற்றும் ஷி யோமி (Shi Yomi) என்னும் மூன்று புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது.

26) இந்திய அரசானது மிசோரத்தை ஒட்டிய இந்திய மியான்மர் எல்லைப் பகுதியில் **'ஜோகாவ்தார் உள்நுழைவு சோதனை சாவடியினை'** (Zokhawthar immigration check post) அமைத்துள்ளது.

27) **கூகுள் நிறுவனமானது** அறிமுகப்படுத்தியுள்ள **'நவ்லேகா திட்டத்தின்'** (Project Navlekha) மூலமாக ஆன்லைனில் உள்ள தகவல்கள் இந்தியப் பயனாளர்களுக்கு எளிதில் புரியும் வகையில் பிராந்திய மொழிகளில் மாற்றிப் படித்துத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

28) எவரெஸ்ட் மலைச் சிகரத்தைப் பெண்கள் அடைந்ததன் வெள்ளி விழாவினை நினைவு கூறும் விதமாக முழுவதும் பெண்கள் அடங்கிய மலையேற்றக் குழுவானது **மணிராங்க் மலைச்சிகரத்தை** (Mt.Manirang) நோக்கிய தங்களது பயணத்தை இமாச்சலப் பிரதேசத்திலிருந்து தொடங்கியது.

29) மத்திய அமைச்சரவையானது **'உடனடி முத்தலாக் சட்டமுன் வரைவில்'** (instant triple talaq bill) கோரப்பட்டுள்ள சில சட்டத் திருத்தங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி உடனடி முத்தலாக்கானது பிணையில் வெளிவர இயலாத பிடியானைக் குற்றமாகக் (non-bailable cognisable offence) கருதப்படுகிறது. மேலும் உடனடி முத்தலாக் மூலம் விவாகரத்து செய்யும் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு இச்சட்டத்தின் மூலம் **மூன்று ஆண்டுகள்** வரை சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

30) **உத்தரப் பிரதேச உயர் நீதிமன்றமானது** அம்மாநிலத்தில் உள்ள பசுக்களின் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் முழு கவனம் செலுத்து வகையில் **'பசுக்களின் சட்டப்பூர்வ காப்பாளராக'** (legal guardian of the cows) செயல்பட உள்ளது.

31) ஒடிசா மாநில அரசானது தனது மாநிலத்தில் **சட்ட மேலவையை** (legislative Council) உருவாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

32) இந்தியக் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்துக்கான தேசிய அறக்கட்டளையானது (Indian National Trust for Art and Cultural Heritage) **இராஜஸ்தான்** மாநிலத்திலுள்ள வரலாற்றுப் பாரம்பரியமிக்க கட்டிடங்களை புனரமைத்து வருவாய் ஈட்டித்தர வல்ல 'பொருளாதாரச் சொத்துகளாக' மாற்றத் திட்டமிட்டுள்ளது.

33) **உத்தரப் பிரதேச** மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் தனித்தன்மை வாய்ந்த பாரம்பரிய தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு அம்மாநில அரசானது **'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு'** மாநாட்டினை (One District One Product - ek zila - k ut padan) நடத்தி முடித்துள்ளது.

34) மத்திய பட்டு வாரியமானது (Central Silk Worm) பட்டுப்புழுக்கூடுகளின் உற்பத்தித்திறனை (Productivity of Cocoons) அதிகரிக்கவும் அதன் மூலம் பட்டுப்புழு வளர்ப்பில் (Sericulture) ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் புதிய வகை **மல்பெரி மற்றும் வன்யா பட்டு இனங்களை** (Races of Silkworm seed of mulberry and Vanya Silk) அறிமுகப்படுத்தியுள்ளது.

35) “கடல் - சேவைகள், தொழில்நுட்பம், கூர்நோக்கல், வளங்கள் படிமமாக்கம் மற்றும் அறிவியல்” (**O-SMART** - Ocean Services, Technology, Observations, Resources Modelling and Science) என்ற திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

36) ஐதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தெலுங்கானா மாநில அரசானது டெக் மஹிந்த்ரா நிறுவனத்துடன இணைந்து **‘தொடர் சங்கிலி மாவட்டத்தினை’** (Blockchain district) உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. ‘தொடர் சங்கிலித் தொழில்நுட்பத்துக்கான சிறப்பு மையமான’ (Centre of Excellence for Blockchain) இது இந்தியாவிலேயே முதன் முறையாக வடிவமைக்கப்படுவதாகும்.

37) ஒடிசா மாநில அரசானது பித்தார்கனிகா தேசியப் பூங்காவுக்கு (Bhitarkanika National Park) அருகிலுள்ள தங்கமால் (Dangamal) என்னும் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த **‘விளக்க மையம்’** (Interpretation Centre) ஒன்றினை அமைத்துள்ளது. இவ்விளக்க மையமானது அலையாத்திக் காடுகளில் காணப்படும் உயிர்ப்பல்வகைமை (Mangrove Biodiversity) மற்றும் முதலைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக ஒடிசா மாநில அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பற்றி விவரிக்கிறது.

38) பசுமை இந்தியா திட்டம் (Green India Mission), பருவநிலை மாறுபாட்டுக்கு எதிரான செயல்பாட்டுத் திட்டம் (Action Plan on Climate Change) மற்றும் UNFCCC அமைப்புக்கான ‘இந்தியாவின் தேசிய உறுதியளிக்கப்பட்ட பங்களிப்பு’ (India’s Nationally Determined Contribution) ஆகியவற்றுக்கான **‘தேசிய REDD+ திட்டத்தினை’** (National REDD+ Strategy) இந்தியா தயாரித்துள்ளது.

39) **தெலுங்கானா** மாநில அரசானது முதன் முறையாக அதன் தலைநகரான ஐதராபாத்தில் **‘பேரிடர் பதிலெதிர்ப்புப் படைக்கான’** (Disaster Response Force) வாகனங்களை முதன் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

40) மத்திய அரசானது டேராடூன் அருகே யமுனை ஆற்றின் குறுக்கே அமைக்கப்படவிருக்கும் லக்வார் பல்நோக்கு திட்டத்தினை (Lakhwar Multipurpose Project) தொடங்கி வைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த பல்நோக்கு திட்டத்தினை டெல்லி, உத்தராகாண்ட், உத்தரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் ஒன்றாக இணைந்து செயல்படுத்த உள்ளன.

41) நாகாலாந்து மாநில **அரசானது 'சிங்பன் வனவிலங்கு சரணாலயத்தை'** (Singphan wildlife Sanctuary) மத்திய அரசின் அனுமதியோடு நாட்டின் 30வது யானைகள் காப்பகமாக (Elephant Reserve) அறிவித்துள்ளது.

42) மத்திய அரசானது தேக்கமடைந்த நிலையில் உள்ள அனல் மின் உற்பத்தி திட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை வழங்க **பிரதீப் குமார் சின்ஹா** குழுவினை அமைத்துள்ளது.

43) சாந்தாலி (Santhali) மொழியானது விக்கிப்பீடியா வலைதளத்தில் அதனுடைய உண்மையான எழுத்துரு வடிவத்துடன் (Native Script) தகவல்களை வெளியிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த பழங்குடியினர் பயன்படுத்தும் மொழிகளுள் ஒன்று, விக்கிப்பீடியாவில் அதன் உண்மையான எழுத்துரு வடிவத்துடன் இடம்பெறுவது இதுவே முதன் முறையாகும்.

44) ஜார்க்கண்ட் மாநில கலை, கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த **'சர்வதேச வண்ணமய தண்ணீர் திருவிழாவானது'** (International Water Colour Festival 2018) ராஞ்சியிலுள்ள ஆட்ரி இல்லத்தில் (Audrey House) நடைபெற்றது.

## சர்வதேசம்

1) ஆசியா - பசிபிக் ஒளிபரப்பு வளர்ச்சி நிறுவனத்தின் (Asia - Pacific Institute for Broadcasting Development - AIBD) தலைவராக இந்தியாவானது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

2) நோபல் பரிசு வென்றவரும் ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளருமான **கோபி அனான்** (Kofi Annan) **2018 ஆகஸ்டு 18** அன்று சுவிட்சர்லாந்தில் உள்ள பெர்ன் நகரில் இயற்கை எய்தினார். ஐ.நா.வின் ஏழாவது பொதுச் செயலாளரான அவர் 1997 முதல் 2006 வரையிலான கால கட்டத்தில் தொடர்ந்து இரண்டு பதவிக் காலங்களுக்குப் பொறுப்பில் இருந்தார். மேலும் இவர் 1938 ஏப்ரல் 8 அன்று கானா நாட்டிலுள்ள குமாசியில் (Kumasi, Ghana) பிறந்தார்.

3) **அஞ்சல் நெடுஞ்சாலை (Postal Highway)** : ஹூலாகி ராஜமார்க்கம் (Hulaki Rajmarg) என்று அழைக்கப்படும் இந்நெடுஞ்சாலையானது நேபாளத்தின் தராய் பகுதியில் கிழக்கே பத்ராபூரிலிருந்து (Bhadrapur) மேற்கே தோதாரா (Dodhara) வரையில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு இந்திய அரசானது 33 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. விரைவாக அஞ்சலகச் சேவைகளை அளிக்கும் வகையிலான போக்குவரத்தினை நேபாளத்தில் ஏற்படுத்துவதே இந்த அஞ்சல் நெடுஞ்சாலையின் நோக்கமாகும்.

**4)** 1988 ஆகஸ்டு 8 அன்று (8.8.1888) மியான்மரில் வெடித்த '8888' மக்கள் கிளர்ச்சியானது, மக்களைக் கொடிய வறுமையில் தள்ளிய, அப்போது ஆட்சியிலிருந்த பர்மா சோசலிஸ்ட் கட்சியின் (Burma Socialist Programme Party) தவறான அரசியல், சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக நடைபெற்றதாகும்.

**5)** மருத்துவத் துறையில் திடீரென்று ஏற்படும் உடலுறுப்புகளுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஐக்கிய (UK) ராஜாங்கமானது திசு மற்றும் உடலுறுப்பு தானம் தொடர்பான தனது நாட்டின் சட்ட திட்டங்களை மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளது. குறிப்பாக இந்த சட்டமானது இந்திய வம்சாவளியினருக்குள் எளிதாக உடலுறுப்பு தானம் நடைபெறுவதை உறுதி செய்கின்றது. அண்மையில் மேக்ஸ் ஜான்சன் எனும் 10 வயது சிறுவன் உடலுறுப்பு தானம் கிடைக்கப்பெற்று இதய மாற்று அறுவை சிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டான். அச்சிறுவனின் நினைவாக திருத்தியமைக்கப்படவிருக்கும் இச்சட்டத்திற்கு மேக்ஸ் சட்டம் (Max's Law) என்று பெயரிடப்பட்டுள்ளது.

**6)** **இந்தியாவுக்கு 'யுக்திசார் வர்த்தக உறுதிப்பாட்டுக்கான நிலை - 1** அந்தஸ்தினை' [Strategic Trade Authorization - 1 Status - (STA - 1)] **அமெரிக்காவானது** வழங்கியுள்ளது. அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உரிம விலக்குக்கு (License Exception) இது வழிவகுக்கிறது.

7) காஸ்பியன் கடலையும் அதன் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு **'காஸ்பியன் கடல் ஒப்பந்தத்தில்'** (Caspian Sea Agreement) ரஷ்யா, அஜர்பைஜான், ஈரான், கஜக்ஸ்தான் மற்றும் துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

8) வெனிசுலா நாட்டில் ஒரு மில்லியன் விழுக்காட்டு அளவுக்கு மிக மோசமான அளவில் உயர் பணவீக்க (Hyper inflation) நிலையானது ஏற்பட்டுள்ளது. 'பன்னாட்டு பண நிதியத்தின்' (International Monetary Fund) அறிக்கையின்படி, இந்த உயர் பணவீக்க நிலையானது 2000வது ஆண்டுகளில் ஜிம்பாப்வேயில் ஏற்பட்ட பணவீக்கம் மற்றும் 1920களில் ஜெர்மனியில் ஏற்பட்ட பணவீக்கம் ஆகியவற்றுடன் ஒப்பிடத்தக்க வகையில் உள்ளது.

9) அமெரிக்க பாதுகாப்புப் படையின் ஆறாவது பிரிவாக **'விண்வெளிப் படை' (US Space Force)** என்பதனை உருவாக்க அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் திட்டமிட்டுள்ளார்.

10) புதுதில்லியில் நடைபெற்ற இந்தோ-ஜெர்மானிய இரு தரப்பு வளர்ச்சி ஒத்துழைப்பு மாநாட்டின் (Indo-German Bilateral Development Co-operation) 'அரசுகளுக்கிடைப்பட்ட ஒரே குடையின் கீழான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ஒத்துழைப்பு ஒப்பந்தமானது' (Government to Government Umbrella Agreement on Financial Co-operation and Technical Co-operation 2017) கையெழுத்திடப்பட்டது.

11) மத்திய அரசானது உதான் திட்டத்தின் கீழ் (UDAN Scheme) சர்வதேச வான் போக்குவரத்துத் தொடர்புக்கான (International Air Connectivity) திட்டத்தின் வரைவினை (Draft) வெளியிட்டுள்ளது. இந்த வரைவானது 2027-ம் ஆண்டுக்குள் சர்வதேச விமானப் போக்குவரத்து மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கையை ஆண்டுக்கு 20 கோடி என்ற நிலைக்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

12) உலக மக்களை இன்ஃப்ளுயன்சா நோயிலிருந்து பாதுகாக்கும் **அடுத்த தலைமுறை தடுப்பூசியினை** (Next Generation influenza Vaccine) உருவாக்குவதற்காக **இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (European Union)** ஆகியவை **ஹாரிசான்** 2020 **(Horizon 2020)** என்னும் திட்டத்தின் கீழ் இணைந்து செயல்பட உள்ளன.

13) உலகின் மிகப்பெரிய **முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட பவளப் பாறையானது (3-D Printed reef) மாலத்தீவுகளின் சம்மர் தீவுகளிலுள்ள** (Summer Island, Maldives) கடலுக்கு அடியில் வைக்கப்பட்டுள்ளது.

14) "இந்தியா - தென் ஆப்பிரிக்கா நாடுகளுக்கிடையிலான 20 ஆண்டுகள் பழமை வாய்ந்த யுக்திசார் நட்புறவு" "20 years strategic partnership between India and South Africa) என்னும் கருத்துருவுடன் கூடிய 'கூட்டு தபால் தலைகளை' (Joint Postage Stamps) இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய இரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ளன.

15) இளைஞர்களிடையே இந்தி மொழியில் வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றை ஊக்கப்படுத்திடவும் அம்மொழியின் வளர்ச்சிக்காகவும் மொரீஷியஸ் நாட்டில் உள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் 'பாணினி மொழி ஆய்வகமானது' (Panini Language Laboratory) அமைக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## மாநாடுகள் & கருத்தரங்குகள்

| **மாநாடு/கருத்தரங்குகள்** | **நோக்கம்/கருத்துரு** (Purpose/Theme) | **இடம்** | **நாள்** |
|---|---|---|---|
| ➢ **24-வது சர்வதேச தத்துவவியல் மாநாடு** (24th World Congress of Philosophy) | "மனிதத்துடன் வாழ்வதை அறிந்து கொள்ளுதல்" (Learning to be Human) | பெய்ஜிங், சீனா | 2018, ஆகஸ்டு 13 முதல் 17 வரை |

| | | | |
|---|---|---|---|
| ➢ **11வது உலக இந்தி மாநாடு** | "வைஷ்விக் இந்தி அவர் பாரதீய சன்ஸ்கிருதி" (Vaishvik Hindi Aur Bhartiy Sanskriti) | போர்ட் லூயிஸ், மொரீஷியஸ் | 2018, ஆகஸ்டு 18 முதல் 20 வரை |
| ➢ உணவுப் பதப்படுத்துதல் தொழில் நுட்பத்தில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு (International Conference on Recent Advances in Food Processing Technology) | "உணவுப் பதப்படுத்துதல் தொழில்நுட்பம் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்" | தஞ்சாவூர், தமிழ்நாடு | 2018, ஆகஸ்டு 17 |
| ➢ **இந்திய வங்கிகளின் மாநாடு 2018** (India Banking Conclave 2018) | எதிர்காலத்தில் காத்திருக்கும் சவால்களை சமாளிக்கும் வகையில் இந்திய வங்கித் துறையை மேம்படுத்துதலே இந்த மாநாட்டின் நோக்கமாகும். | புது தில்லி | 2018 ஆகஸ்டு 23 முதல் 24 ரை |
| ➢ **இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சர்வதேச புத்த சமய மாநாடு 2018** (International Buddhist Conclave 2018) | "புத்தரின் பாதை - உயிர்ப்புடன் இருக்கும் பண்பாடு" (Buddha Path - The Living Heritage) | புது தில்லி | 2018, ஆகஸ்டு 22 |
| ➢ **G20 நாடுகளின் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான அமைச்சர்களின் மாநாடு** (G20 Digitial Economy Ministerial Meeting) | "முறையான, நீடித்த வளர்ச்சிக்கான ஒருமித்த கருத்தை உருவாக்குதல்" (Building Consensus for fair and sustainable Develoment) | சால்டா, அர்ஜென்டினா (Salta, Argentina) | 2018, ஆகஸ்டு 23 முதல் 24 வரை |
| ➢ **மூன்றாவது இந்தியப் பெருங்கடல் மாநாடு** (Indian Ocean Confernce) | "பிராந்திய அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்" (Building Regional Architectures) | ஹனோய், வியட்நாம் | 2018, ஆகஸ்டு 27 முதல் 28 வரை |
| ➢ தேர்தல் பங்குதாரர்களான ஆசிய நாடுகளின் நான்காவது மாநாடு | "தேர்தலில் வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மைத் தன்மையை மேம்படுத்துதல் : அனைவரும் ஒன்று சேர்ந்து | கொழும்பு, இலங்கை | 2018, ஆகஸ்டு 27 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| (4th Asian Electroal Stake holders Forum - AESF - IV) | ஜனநாயகத்தை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்” (Advancing Election Transparency and Integrity : Promoting and defending Democracy Together) | | |
| ➢ முதலாவது சார்க் வேளாண் கூட்டுறவு சங்கங்களின் வணிக மாநாடு (1st SAARC Agri Co-operative Business Forum) | “தெற்காசியாவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் 1 மற்றும் 2-ஐ அடைவதற்கு விவசாயக் குடும்பங்களின் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்” (Organizing and Strengthening Family Farmers Co-Operatives to attain the sustainable Development Goals - 1 and 2 in South Asia) | காத்மண்டு, நேபாளம் | 2018, ஆகஸ்டு 29 |
| ➢ ஆறாவது ஒட்டு மொத்த பொருளாதாரத்துக்கான பிராந்தியக் கூட்டிணைவின் வர்த்தக அமைச்சர்கள் மாநாடு [6th Regional Comprehensive Economic Partnership (RECEP) Trade Ministers Meeting] | RCEP என்பது ஆசியான் கூட்டமைப்பில் (ASEAN) உள்ள 10 நாடுகளுக்கிடையில் முன் மொழியப்பட்டுள்ள தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement) ஆகும். | சிங்கப்பூர் | 2018, ஆகஸ்டு 30-31 |
| ➢ **நான்காவது பிம்ஸ்டெக் மாநாடு** (4th BIMSTEC Summit) | “அமைதியான, செழிப்பான, நீடித்த வளர்ச்சியுடன் கூடிய வங்காள விரிகுடாப் பகுதியினை நோக்கி நகர்தல்” (Towards a Peaceful, Prosperous and sustainable Bay of Bengal Region) | காத்மண்டு, நேபாளம் | 2018, ஆகஸ்டு 30 - 31 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## திட்டங்கள்

| திட்டங்கள் (Schemes/Yojanas) | நோக்கம்/செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் (Purpose/ Why in News) | அமைச்சகம்/ காபினட் (Ministry Cabinet) | நாள் |
|---|---|---|---|
| ➢ **முக்கிய மந்திரி யுவ நேஸ்தம்** (Mukhya mantri Yuva Nestam) | வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் | ஆந்திரப் பிரதேச அரசினால் தொடங்கப்பட்ட திட்டம் | |
| ➢ **கன்யஸ்ரீ பிரகல்ப திட்டம்** (Kanyashree Prakalpa Scheme) | பெண் குழந்தைகளின் பள்ளிப் படிப்புக்கு உதவுதல் மற்றும் அவர்களின் திருமணத்தை 18 வயது வரை நடைபெறாமல் பார்த்துக் கொள்ளுதல் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | மேற்கு வங்க மாநிலம் | |
| ➢ **ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம்** (Swadesh Darshan Scheme) | இதன் முதல் திட்டமான “வட கிழக்கு சுற்று : இம்பால் மற்றும் காங்ஜோம்” (North East Circuit : Imphal and Khongjom) மணிப்பூரில் தொடங்கப்பட்டது. | மத்திய சுற்றுலா அமைச்சகம் | 2018, ஆகஸ்டு 15 |
| ➢ **ராஷ்ட்ரிய உச்சாதார் சிக்ஷ அபியான்** (Rashtriya Uchchatar Shiksha Abhiyan) | இத்திட்டத்தின் கீழ் 117 மாவட்டங்களை ‘மேம்படுத்தப்பட வேண்டிய மாவட்டங்களாக’ (aspirational districts) நீதி ஆயோக் அறிவித்துள்ளது. | மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (Ministry of HUman Resources & Development) | 2013 |
| ➢ **பிஜு ஸ்வஸ்த்ய கல்யாண் யோஜனா** (Biju Swasthya Kalyan Yojana) | இத்திட்டத்தின் மூலம் ஒரு குடும்பத்திற்கு இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ உதவிக்காக ஆண்டொன்றிற்கு ஐந்து லட்ச ரூபாய் வரை ரொக்கமற்ற உதவிகள் வழங்கப்படும் மேலும், பெண்களுக்கான மருத்துவ உதவியானது 7 லட்ச ரூபாய் வரை வழங்கப்படும். | ஒடிசா மாநில அரசு | 2018, ஆகஸ்டு 15 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| ➢ **கந்தி வெலுகு கண் பரிசோதனைத் திட்டம்** (Kanti Velugu Eye Care Scheme) | இத்திட்டத்தின் மூலம் தெலுங்கானா மாநில மக்கள், கண் பரிசோதனை, மருந்துகள், கண்ணாடிகள் மற்றும் கண் அறுவைச் சிகிச்சை ஆகியவற்றை இலவசமாகப் பெற முடியும். | தெலுங்கானா | 2018, ஆகஸ்டு 15 |

**2018 ஆகஸ்டு மாதம் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்:**

| பயிற்சியின் பெயர் | பங்கு பெற்ற நாடுகள் | பயிற்சியின் வகை | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|---|
| ➢ **மைத்ரி 2018** (Maitree 2018) | இந்தியா & தாய்லாந்து | கூட்டு இராணுவப் பயிற்சி | தாய்லாந்து | 2018, ஆகஸ்டு 31 |
| ➢ SCO **அமைதிப் பயிற்சி 2018** (SCO Peace Mission 2018) | SCO அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் பங்கு பெற்றன. | தீவிரவாதத்துக்கு எதிரான கூட்டு இராணுவப் பயிற்சி | செபார்குல், ரஷ்யா (Chebarkul, Russia) | 2018, ஆகஸ்டு 24 |

**ஆகஸ்டு 2018-ல் விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட்டுகள் :**

| செயற்கைக் கோள்/திட்டம் | நாடு | ஏவு வாகனம் (Launch Vehicle) | நோக்கம் (Purpose) | ஏவப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| ➢ **காவோஃபென் - 11 (Gaofen - 11)** | சீனா | லாங்க் மார்ச் 4B (Long March 4B) | இது ஒரு ஒளியியல் தொலை உணர்வு செயற்கைக் கோள் (Optical Remote Sensing Satellite) ஆகும். | 2018, ஜூலை 31 |
| ➢ **ஏவோலஸ் (Aeolus)** | ஐரோப்பிய விண்வெளி முகமை (European Space Agency) | வேகா இராக்கெட் (Vega Rocket) | இது உலகின் முதலாவது காற்று உணர்வு செயற்கைக் கோள் (Wind Sensing Satellite) ஆகும். இது பூமியின் காற்று சுழற்சியினை அதிலும் குறிப்பாக | 2018, ஆகஸ்டு 22 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெப்ப மண்டலக் காற்று சுழற்சியினைத் (tropical winds) துல்லியமாகக் கண்டறிய உதவுகிறது. | |
| ➢ **ககன்யான் (GAGANYAAN)** | இந்தியா | | இஸ்ரோவானது இத்திட்டத்தின் மூலம் மனிதனை விண்ணுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. | 2022ல் செலுத்தப்பட உள்ளது |
| ➢ **ICESAT - 2** (Ice, Cloud and Land Elevation Satellite - 2 Mission) | நாசா (NASA) | | இந்தச் செயற்கைக் கோளில் உள்ள 'மேம்பட்ட நில அமைப்பியல் லேசர் குத்துயர அளவி அமைப்பானது' (Advanced Topographic Laser Altimeter System - ATLAS) விண்கலத்திலிருந்து பூமிக்கு வந்து திரும்புவதற்கு போட்டான் ஒளி எடுத்துக் கொள்ளும் கால அளவினைக் கொண்டு உயரத்தினை கணக்கிடுகிறது. | 2018, செப்டம்பர் |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## பாதுகாப்பு & விண்வெளி

1) **சந்திரயான் - 2 திட்டம் ஒத்திவைப்பு :** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் நிலவை நோக்கிய இரண்டாவது பயணத்திட்டமான சந்திரயான் - 2 (Chandrayaan - 2) விண்ணில் செலுத்தப்படுவது 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (நிலவை நோக்கிய இந்தியாவின் முதலாவது செயற்கை கோள் திட்டமான சந்திரயான் - 1 2008ஆம் ஆண்டில் வெற்றிகரமாக விண்ணிற்கு செலுத்தப்பட்டது) இதனை தொடர்ந்து சந்திரயான் - 2 ஆனது விண்ணில் செலுத்தப்படுவது இம்முறையுடன் சேர்த்து இரண்டாவது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 'சந்திரயான் - 2' திட்டமானது முதலில் 2018 ஏப்ரல் மாதம்

விண்ணில் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு பின்னர் 2018 அக்டோபர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது ஆகும். இஸ்ரோ ஆனது 2019 மார்ச் மாதத்திற்குள் ஒட்டு மொத்தமாக 19 விண்வெளி திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்த 19 திட்டங்களுக்குள் 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்திற்காக உயர் பட்டை அகலம் கொண்ட தகவல் தொடர்பு அமைப்பை வடிவமைக்கச் செலுத்தப்படவிருக்கும் நான்கு செயற்கைக் கோள்களும் அடங்கும்.

2) இந்தியாவிலேயே முதன் முறையாக உயிரி எரிபொருள் மூலம் இயங்கும் (Bio-Fuel Powered Plane) விமானமான பாம்பார்டியர் **Q400 [Bombardier Q400 (VT-SUI)]** டேராடூனிலிருந்து டெல்லிக்கு தனது முதல் பயணத்தினை வெற்றிகரமாக முடித்தது. இந்த பாம்பார்டியர் Q400 விமானமானது ஸ்பைஸ்ஜெட் (Spicejet) நிறுவனத்துக்குச் சொந்தமானது ஆகும்.

3) வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கேரளாவில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக **இந்தியக் கடற்படையானது** (Indian Navy) **'ஆபரேஷன் மதத்'** (Operation Madad)- ஐத் தொடங்கியது. **இந்திய இராணுவமானது** (Indian Army) வெள்ளத்தில் சிக்கிய மக்களை பாதுகாப்பாக மீட்கும் பொருட்டு **'ஆபரேஷன் சஹ்யோக்' (Operation Sahyog)** - ஐத் தொடங்கியது.

4) குறைந்த தூரம் மட்டுமே சென்று தாக்கும் அடுத்த தலைமுறை எறிவிசை ஏவுகணையான (Short range ballistic missile) **'ஃபடே மொபின்' (Fateh Mobin)** ஏவுகணையை **ஈரான்** வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

5) இந்தியா இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளும் கூட்டாக இணைந்து பராக்-8 என்னும் கடற்படை மற்றும் வான்படையில் பயன்படுத்தப்படும் ஏவுகணையைத் (Multipurpose BARAK-8 Missile) தயாரிக்க உள்ளன.

6) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'கௌசார்' என்னும் போர் விமானத்தை (KOWSAR Figthter Jet) ஈரான் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

7) பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமானது (DRDO) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **மித எடை கொண்ட மென்சரிவு குண்டான (light weight glide bomb) திறம் வாய்ந்த வான்வெளிக்கான எதிர்ப்பு ஆயுதத்தினை** (Smart Anti Airfield Weapon - SAAW) இந்திய இராணுவ விமானத்தின் மூலமாக ராஜஸ்தானின் பொக்ரானில் இருந்து வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.

8) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹெலிகாப்டர் மூலம் ஏவப்படக்கூடிய பீரங்கிகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையான **'ஹெலினா'** (Anti-Tank Guided Missile - ATGM Helina) ஆனது இந்திய இராணுவ ஹெலிகாப்டரின் மூலமாக ராஜஸ்தானின் பெக்ரானில் இருந்து வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

9) புவிக்கு மிக அருகில் உள்ள விண்கல்லான **'பென்னு'வை** (Bennu asteroid) நோக்கிய தனது பயணத்தின் இறுதிக் கட்டத்தினை **ஓசிரிஸ்-ரெக்ஸ் விண்கலமானது** (OSIRIS - REX Spacecraft) எட்டியுள்ளது. இதன் மூலம் இந்த விண்கலமானது

தனது விண்கல் சார்ந்த செயல்பாடுகளைத் (asteroid operations) தொடங்கியுள்ளது.

10) இந்தியாவில் செயல்பாட்டிலுள்ள ஒரே ஒரு விமானம் தாங்கிக் கப்பலான **ஐ.என்.எஸ் விக்ரமாதித்யாவில்** (aircraft carrier INS Vikamaditya) முதன் முறையாக **கடல்சார் நீர்மவியல் அழுத்த அமைப்பான (marine hydraulic system) GS - 1 MF மற்றும் GS - 3** ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இவை இக்கப்பலின் வாயுப்பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளின் செயல்திறனை அதிகப்படுத்த உதவுகின்றன.

11) **ஜின்காங் - 2 (Xingkong - 2) :** அதி நவீன தொழில்நுட்பம் கொண்ட ஹைபர்சானிக் வேகத்தில் செல்லக் கூடிய முதலாவது 'அலையேறி' விமானமான ஜின்காங் - 2 (Xingkong - 2 or Starry Sky - 2)ஐ சீனா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

| **புதிய கண்டுபிடிப்புகள்** | **வகை/நோக்கம்** (Type/Purpose) | **இடம்** |
|---|---|---|
| ➤ **உலகின் முதலாவது ஒற்றை குரோமோசோம் கொண்ட ஈஸ்ட்டு** (World's first single Chromosome Yeast) | இச்சோதனையானது 16 குரோமோசோம்கள் கொண்ட புரூவர் ஈஸ்ட்டின் (Brewer's Yeast) மீது நடத்தப்பட்டது. மேலும் இந்த ஒற்றைக் குரோமோசோம் ஈஸ்ட்டில், மூன்றில் ஒரு பகுதி ஜீனோமானது மனித மூதாதையர்களின் ஜீனோம்களை ஒத்துப் போகிறது. | சீனா |
| ➤ **ரைஸ் கிரீக்** (Rise Creek) | மெட்ராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கழகமானது (IIT Madras) 'சக்தி திட்டத்தின்' (Project Shakthi) கீழ் உள்நாட்டிலேயே மைக்ரோ சில்லுகளை (Microprocessor) முதன் முறையாக உருவாக்கியுள்ளது. | IIT மெட்ராஸ் |
| ➤ **ஏரோஜெல்** (Aerogel) | பீர் தயாரிக்கும் போது வெளிவரும் கழிவுப் பொருட்களிலிருந்து உருவாக்கப்படும் ஏரோஜெல்லானது தெளிவான வெப்பம் கடத்தா மீத்திறன் காப்புக் கூழ்மம் (heat - resistant super - insulating gel) ஆகும். | |
| ➤ **உவாக்கிடைட்** (Uakitite) | இந்த புதிய தனிமமானது கிழக்கு ரஷ்யாவில் விழுந்த விண்கல்லில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. | சைபீரியா |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| ➢ **வோல்பாச்சியா பாக்டீரியா** (Wolbachia Bacteria) | மிகவும் நுண்ணிய வோல்பாச்சியா பாக்டீரியங்கள், கொசுக்களுடன் சேர்த்து சுமார் 60% பூச்சி இனங்களில் காணப்படுகின்றன. | ஆஸ்திரேலியா |

1) ‘சோஃபியா’ எனும் எந்திர மனிதனைப் போன்றே இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள எந்திர மனிதனுக்கு (Indian Humanoid Robot) **‘ரேஷ்மி’** (Rashmi) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ரேஷ்மியால் ஆங்கிலம், ஹிந்தி, போஜ்பூரி மற்றும் மராத்தி ஆகிய மொழிகளை நன்றாகப் பேச முடியும். இதனை **ரஞ்சித் சிறிவஸ்தவா** என்பவர் உருவாக்கிறயுள்ளார்.

2) மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது (Ministry of Commerce and Industry) நாட்டின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் பயன்பாட்டுக்காக **‘நிர்யத் மித்ரா’** என்னும் கைபேசிச் செயலியினை (Niryat Mitra App) அறிமுகப்படுத்தியுள்ளது.

3) மக்கள் தங்களின் அரசுப் பிரதிநிதிகளின் செயல்பாடுகளைப் பற்றிய மதிப்பீட்டினை அளிக்கவும் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைக்கவும் ‘தேசிய தேர்தல் உருமாற்ற கைபேசிச் செயலியினை’ **(NETA App** - National Electoral Transformation App) முன்னாள் குடியரசுத் தலைவரான பிரணாப் முகர்ஜி அறிமுகப்படுத்தி வைத்தார்.

4) இந்தியாவின் **முதலாவது தேசிய வனவிலங்கு மரபுப்பொருள் வள வங்கியானது,** (National Wildlife Genetic Resource Bank) **ஐதராபாத்திலுள்ள** ‘செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின்’ (Centre for Cellular and Molecular Biology) ‘அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான ஆய்வகத்தில்’ (Laboratory of Conservation of End angered Species facility) அமைக்கப்பட்டுள்ளது.

5) **ஃப்ரீடம் பேபி (Freedom baby)** என்று பெயரிடப்பட்ட, இந்தியாவிலேயே முதல் முறையாக காப்பகத்தில் வைத்து உருவாக்கப்பட்ட (Captive breeding) **ஹம்போல்ட் பென்குயினானது** (Humboldt Penguin) உயிரிழந்தது.

6) ஹிக்ஸ் போசான் (Higgs Boson) துகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அத்துகளானது ‘அடிமட்ட குவார்க்குகள்’ (bottom quarks) எனப்படும் அடிப்படைத்துகள்களாக சிதைவடைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

7) நாசாவின் ‘மாபெரும் வான் ஆய்வகத் திட்டத்தினுள்’ (Great Observatory) செயல்பாட்டில் உள்ள வான் தொலைநோக்கிகளின் குழுமத்தில் 2003 ஆகஸ்டு 25 அன்று இணைக்கப்பட்ட **ஸ்பிட்சர் விண்வெளித் தொலைநோக்கியானது** (Spitzer Telescope) தனது 15 வருட செயல்பாட்டினை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## பொருளாதாரம்

1) அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பானது சுமார் 10% வரை சரிந்து வரலாறு காணாத அளவுக்கு 71 ரூபாயாகக் குறைந்துள்ளது. இதன் மூலம் ஆசியாவிலேயே மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்ட நாணயமாக இந்திய ரூபாய் உள்ளது.

2) தொலைத்தொடர்பு, விமானப் போக்குவரத்து, மின்-வர்த்தகம் மற்றும் மருத்துவம் போன்ற பல்வேறு சேவைத் துறைகளிலும் நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளின் தரத்தினை மதிப்பீடு செய்வதற்காக **'இந்தியத் தர நிர்ணய ஆணையமானது'** (Bureau of Indian Standards - BIS) புதிய தர நிர்ணய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

3) இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI), உணவுப் பெயரிடல் மற்றும் விதிகளைக் காட்சிப்படுத்துதல் தொடர்பான உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் (பெயரிடல் மற்றும் காட்சிப்படுத்துதல்) விதிகள், 2018-ன் வரைவினை (Food Safety and Standards Labelling and Display Regulations 2018) கண்காணிப்பதற்கு **B.சசிகிரன்** தலைமையிலான மூன்று நபர் அடங்கிய குழுவினை (B.Sekikeran Committee) அமைத்துள்ளது.

4) ஐந்தாம் தலைமுறைத் தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டும் குழுவான **A J பால்ராஜ் குழுவானது** (A J Paulraj 5G Steering Committee) **5G** தொழில்நுட்பத்தை முன்கூட்டியே செயல்படுத்துவதற்கான ஒழுங்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு பரிந்துரை செய்துள்ளது.

5) மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது (Ministry of Housing and Urban Affairs) வெளியிட்டுள்ள **'வாழ்வதற்கு ஏற்ற நகரங்களுக்கான குறியீட்டில்'** (Ease of Living Index) மகாராஷ்டிராவிலுள்ள **புனே** நகரமானது (Pune, Maharashtra) முதலாவது இடத்திலும் **சென்னை** மாநகரமானது **14-வது** இடத்திலும் உள்ளன.

6) பொருளாதார நுண்ணறிவுப் பிரிவானது (Economic Intelligence Unit) வெளியிட்டுள்ள **'வாழத்தகுந்த நாடுகளின் பட்டியலில்'** (Global Liveability Index 2018) ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா முதலாவது இடத்தில் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை இப்பட்டியலில் டெல்லி 112-வது இடத்திலும் மும்பை 117-வது இடத்திலும் உள்ளன.

7) இந்தியாவில் புதிதாக வளர்ந்து வரும் தொழில்முனைவோர் தங்களின் வியாபார யோசனைகளை திறமைவாய்ந்த ஒரு மன்றத்திடம் (distinguished jury) பகிர்ந்து கொண்டு ஆலோசனைகளைப் பெறுவதற்குண்டான தனித்துவமான வாய்ப்பினை வழங்குவற்காக **நீதி ஆயோக் ஆனது 'பிட்ச் டூ மூவ்' (Pitch to Move)** என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

8) ஒடிசா மாநில அரசானது தனது மாநிலத்தில் பல்வேறு காலகட்டங்களில் இயற்றப்பட்ட பல்வகைப்பட்ட வருவாய் சட்டங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து **'ஒற்றை வருவாய் சட்டத்தினைக்'** (Single Revenue Act) கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

9) இந்திய ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம் (Bureau of Energy Efficiency) மற்றும் **'மேம்பட்ட ஆற்றலுக்கான பொருளாதாரக் கூட்டிணைவு'** (Alliance for an Energy Efficient Economy) ஆகியவை இணைந்து **'மாநில மேம்பட்ட ஆற்றலுக்கான தயார்நிலைக் குறியீட்டினை'** (State Energy Efficiency Preparedness Index) வெளியிட்டுள்ளன. இக்குறியீடானது மாநிலங்களின் ஆற்றல் தொடர்பான கொள்கைகள் மற்றும் விதிமுறைகள், நிதி ஒதுக்கீடு முறை, நிறுவனத்தின் திறன் மற்றும் ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகளைக் கையாளுதல் போன்றவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

10) **தேசிய ஆற்றல் சேமிப்புத் திட்டம் (National Energy Storage Mission) :** உற்பத்தி, வேலைவாய்ப்பு, புத்தாக்கம் மற்றும் விலை குறைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளைக் கட்டமைப்பதன் மூலம் ஆற்றல் சேமிப்புத் துறையில் தலைமைத்துவத்தை எட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

11) 'இந்திய சர்வதேச விளம்பர சங்கத்தினால்' (International Advertising Association of India - IAAI) வழங்கப்படும் இந்த ஆண்டுக்கான சிறந்த சந்தைப்படுத்தும் நிறுவனத்துக்கான விருதானது (Marketer of the year Award) குஜராத் கூட்டுறவுச் சங்க பால் சந்தைப்படுத்தும் கூட்டமைப்பு நிறுவனத்துக்கு (Gujarat Co-Operative Milk Marketing Federation Ltd) வழங்கப்பட்டுள்ளது. பிரபலமான அமுல் வணிகச் சின்னம் (Amul Brand) கொண்ட பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பது இந்த குஜராத் கூட்டுறவுச் சங்க நிறுவனமேயாகும்.

12) ஐக்கிய நாடுகளின் மின்னாளுகை வளர்ச்சிக் குறியீட்டில் (UN'S E-Government Development Index - EGDI 2018) இந்தியாவானது 96-வது இடத்தில் உள்ளது. டென்மார்க் இப்பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளது. 2014-ல் வெளியான இதே குறியீட்டில் இந்தியா 118-வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## விருதுகள்

| விருதுகள் / பரிசுகள் | விருது பெறும் நபர் / அமைப்பு (Person/Organisation) |
|---|---|
| ➢ **ஐக்கிய அமெரிக்க நாடுகளின் லீஜியன் ஆஃப் மெரிட் (தளபதிக்கான விருது)** [Legion of Merit (Degree of Commander)] | இந்தியாவின் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவத் தளபதியான "ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக்" (General Dalbir Singh Suhag) (இவ்விருதைப் பெறும் இரண்டாவது இந்தியர்) (இவ்விருதினைப் பெற்ற முதலாவது இந்தியர் ராஜேந்திர சிங்ஜி ஜடேஜா ஆவார். இவர் 1946ல் இவ்விருதினைப் பெற்றார். |
| ➢ **சர்வதேச புவியியல் சிறப்பு வினாடி-வினா விருது** (International Geography Bee Award) | அவி கோயல் (Avi Goel) |
| ➢ **உலக சுகாதார நிறுவனத்தின் உலக புகையிலையற்ற தினம் 2017-க்கான விருது** (WHO World No Tobacco Day 2017 Award) | S.K. அரோரா |
| ➢ **ராஜீவ் காந்தி தேசிய சத்பவனா விருது** (Rajiv Gandhi National Sadbhavana Award ) | மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி |
| ➢ **ஃபீல்ட்ஸ் விருது** (Fields Medal) | இந்தியாவைச் சேர்ந்த கணிதவியலாளர் 'அக்ஷய் வெங்கடேஷ்' (Akshay Venkatesh) |
| ➢ **மூன்றாவது பிரிக்ஸ் திரைப்பட விருது வழங்கும் விழா** (3rd BRICS Film Festival Award), **டர்பன், தென்ஆப்பிரிக்கா** | • சிறந்த நடிகை : பனிதா தாஸ் (Bhanita Das), வில்லேஜ் ராக்ஸ் டார்ஸ் (Village Rockstars)<br>• சிறந்த திரைப்படம் : நியூட்டன் (இயக்குநர் - அமித் மசுர்கார் Amit Masurkar)<br>• சிறப்பு ஜூரி விருது : வில்லேஜ் ராக்ஸ் டார்ஸ் (Village Rockstars), இயக்குநர் : ரிமா தாஸ் (Rima Das) |

## நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்

1) **பல்வேறு மாநிலங்களின் புதிய ஆளுநர்கள் :**

| மாநிலம் | ஆளுநர் |
|---|---|
| ➢ **ஜம்மு காஷ்மீர்** | சத்ய பால் மாலிக் |
| ➢ **பீகார்** | லால்ஜி டான்டன் (Lalji Tandon) |
| ➢ **ஹரியானா** | சத்யதேவ் நாராயணன் ஆர்யா (Satyadev Narayanan Arya) |
| ➢ **திரிபுரா** | கப்டன் சிங் சோலங்கி (Kaptan Singh Solanki) |

| | |
|---|---|
| ➢ **உத்தரகாண்ட்** | பேபி ராணி மௌரியா (Baby Rani Maurya) |
| ➢ **மேகாலயா** | ததாகதா ராய் (Tathagata Roy) |
| ➢ **சிக்கிம்** | கங்கா பிரசாத் |
| ➢ **சத்தீஸ்கர்** | ஆனந்தி பென் படேல் (தற்சமயம் மத்தியப் பிரதேச ஆளுநராக உள்ள இவர், சத்தீஸ்கர் மாநில ஆளுநராகவும் கூடுதல் பொறுப்பு வகிக்கிறார்.) |

2) **ஜிம்பாப்வேயின்** (Zimbabwe) புதிய அதிபராக **எம்மர்சன் நங்காக்வா** (Emmerson Mnangagwa) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

3) அரசியலமைப்புச் சட்ட விதி 89-ன் படி மாநிலங்கள் அவையின் புதிய துணைத் தலைவராக (Deputy Chairman of Rajya Sabha) **ஹரிவன்ஷ் நாராயண் சிங்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4) தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவராக (Chairperson of National Commission for Women) **ரேகா ஷர்மா** (Rekha Sharma) நியமிக்கப்பட்டுள்ளார்.

5) ‘பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா’ (PMFBY) திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலராக (CEO) **‘ஆஷிஷ் குமார் பூட்டானி’** (Ashish Kumar Bhutani) நியமிக்கப்பட்டுள்ளார்.

6) பாதுகாப்புத் துறைச் செயலராகவும் (Secretary of Department of Defence R & D) பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவராகவும் (Chairman, DRDO) **டாக்டர் G.சதீஷ் ரெட்டி** நியமிக்கப்பட்டுள்ளார்.

7) இந்திய வளர்ச்சிப் பொருளாதாரவியலாளரும் வழக்கறிஞருமான **சத்யா S.திரிபாதி** (Satya S Tripathi) ஐக்கிய நாடுகள் சபையின் துணைப் பொதுச் செயலாளராக (Assistant Secretary General of the UN) நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இவர் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) நியூயார்க் அலுவலகத்துக்கும் தலைமை தாங்க உள்ளார்.

8) **‘சர்வதேச நைட்ரஜன் முன்னெடுப்பு’** (International Nitrogen Initiative) என்னும் உலகளாவிய கொள்கை வகுக்கும் அமைப்பின் தலைவராக **‘நந்துலா ரகுராம்’** (Nandula Raghuram) நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பொறுப்பினை ஏற்கும் முதலாவது இந்தியர் மற்றும் முதலாவது ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர் இவரே ஆவார்.

9) மியான்மரில் ரோஹிங்யா முஸ்லீம் சிறுபான்மை இனத்தவர் மீது நடத்தப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக அந்நாட்டு அரசானது **‘ரோசாரியோ மனாலோ’** (Rosario Manalo) தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழுவினை அமைத்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10) சிலி நாட்டின் அதிபராக இரண்டு முறை பதவி வகித்த **மிச்செல் பேச்லட்** (Michelle Bachelet) என்பவர், **ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய உயர் ஆணையராக** (UN High Commissioner for Human Rights) நியமிக்கப்பட்டுள்ளார்.

11) இந்திய அரசு முன்னெடுத்துள்ள சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் நல்லெண்ணத் தூதுவராக திரைப்பட நடிகர் அக்ஷய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புத்தகங்கள் & ஆசிரியர்கள்

1) முன்னாள் கிரிக்கெட் வீரர் **V.V.S.லக்ஷ்மணன்** (VVS Laxman) தனது வாழ்க்கை வரலாற்று நூலான **'281 and Beyond'** என்பதனை எழுதியுள்ளார்.

2) ஆஸ்திரேலிய அணியின் புகழ்பெற்ற முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான **ஷேன் வார்னே** **'No Spin'** என்ற தனது வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியுள்ளார்.

## விளையாட்டு

1) **ஃபோர்ப்ஸ் நிறுவனம்** வெளியிட்டுள்ள அதிகமான வருமானம் ஈட்டும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியலில் **ஏழாவது இடத்தில் P.V.சிந்து** உள்ளார்; இப்பட்டியலில் முதலாவது இடத்தில் **செரீனா வில்லியம்ஸ்** உள்ளார்.

2) **ஒடிசா மாநில அரசானது 2018 ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியைப்** பிரபலமாக்கும் முயற்சியில் **'ஹாக்கிக்கான இதயத்துடிப்பு'** (Heartbeats for Hockey) என்னும் தேசிய அளவிலான பிரச்சாரத்தினை (360 Degree nation-wide publicity campaign) முன்னெடுத்துள்ளது.

3) சீனாவின் **நான்ஜிங்கில் (Najing)** நடைபெற்ற **உலக பாட்மின்டன் சாம்பியன்ஷிப்** போட்டிகளில் (World Badminton Championships 2018) இந்தியாவைச் சேர்ந்த **P.V.சிந்து வெள்ளிப் பதக்கம்** வென்றார். இப்போட்டியில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த **கரோலினா மரின் (Carolina Marin)** தங்கப் பதக்கத்தினை வென்றார்.

4) **2020ம் ஆண்டில் டோக்கியோவில்** நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் முதன் முறையாக மேம்பட்ட பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு **முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தினை** (Facial recognition technology) பயன்படுத்தும் முறையானது அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

5) இந்திய பதின் பருவ மிதிவண்டிப் பந்தய வீரரான **ஈசோ ஆல்பென்** (Esow - Alben - 17 Year) UCI உலக ஜூனியர் மிதிவண்டி சாம்பியன்ஷிப் போட்டியில் (UCI Junior Track Cycling World Championship) வெள்ளிப் பதக்கம் வென்றார்.

6) பூடான் தலைநகர் திம்புவில் (Thimpu) நடைபெற்ற '15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தெற்காசிய கால்பந்துக் கூட்டமைப்பு சாம்பியன்ஷிப் போட்டிகளின்' (South Asian Football Federation (SAFF) Under - 15 Women's Championship) இறுதி ஆட்டத்தில் வங்கதேசத்தை வீழ்த்தி **இந்திய அணியானது** சாம்பியன் பட்டம் வென்றது.

7) சர்வதேச இராணுவ விளையாட்டுப் போட்டிகளானது (International Army Games 2018) அஜர்பைஜான், அர்மேனியா, பெலாரஸ், ஈரான், கஜகஸ்தான், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய ஏழு நாடுகளில் உள்ள 24 பயிற்சி மையங்களில் நடைபெற்றன. இப்போட்டிகள் 2018 ஜூலை 28 முதல் ஆகஸ்டு 11 வரை நடைபெற்றன.

8) இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் இடைக்காலத் தலைமைப் பயிற்சியாளராக ஓய்வு பெற்ற மூத்த சுழற்பந்து வீச்சாளரான (Off-Spin) ரமேஷ் பவார் (Ramesh Powar) நியமிக்கப்பட்டுள்ளார்.

9) **18-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (ஆகஸ்டு 18 – செப்டம்பர் 2)**

- 18-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் தொடங்கின. ஜகார்த்தா (இந்தோனேசியத் தலைநகர்) மற்றும் பாலேம்பாங் (தெற்கு சுமத்ரா மாகாணத்தின் தலைநகரம்) ஆகிய இரு இடங்களில் போட்டிகள் நடைபெற்றன.
- ஆசியப் போட்டிகள் இரு வேறு நகரங்களில் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும்.
- ஈட்டி எறிதல் வீரரான நீரஜ் சோப்ரா தொடக்க விழாவில் இந்திய தேசியக் கொடியை ஏந்திச் சென்றார். நிறைவு விழாவில் ராணிராம்பால் இந்திய தேசியக் கொடியை ஏந்திச் சென்றார்.
- வீடியோ கேம் (Video Games), கானோ போலோ (Canoe polo) போன்ற இ-விளையாட்டுகள் (e-sports) முதன் முறையாக அறிமுக விளையாட்டுப் போட்டிகளாக (demonstration games) சேர்த்துக் கொள்ளப்பட்டன.
- இந்தப் போட்டியுடன் இந்தோனேசியா இரண்டாவது முறையாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| • மல்யுத்தம் (Wrestling) | **பஜ்ரங் பூனியா** - 65 கிலோ (18வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணிக்குக் கிடைத்த முதலாவது தங்கப் பதக்கம்.) |
| | **வினேஷ் போகாத்** - 50 கிலோ (தங்கம் வென்ற முதலாவது இந்திய தடகள வீராங்கனை) |
| • துப்பாக்கி சுடுதல் (Shooting) | **சவுரப் சவுத்ரி** (Saurabh Chaudhary) - ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கம் வென்றார். |
| | **ராகி சர்னோபாட்** (Rahi Sarnobat) - 25 மீ துப்பாக்கி சுடுதலில் தங்கம் வென்ற முதலாவது இந்தியப் பெண் (25 m pistol event) |

| | |
|---|---|
| • டென்னிஸ் | **ரோஹன் போபண்ணா** மற்றும் **திவ்ஜி சரண்** (Divji Sharan) - ஆடவர் இரட்டையர் டென்னிஸ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றனர். |
| • குண்டு எறிதல் (Shotput) | **தேஜிந்தல் பால் சிங் தூர்** (Tejinder Pal Singh Toor) - தங்கப் பதக்கம் |
| • மும்முறை தாண்டுதல் (Trible Jump Event) | **அர்பிந்தர் சிங்** (Arpinder Singh) - தங்கப் பதக்கம் |
| • ஹெப்டத்லான் தடகளப் போட்டிகள் (Heptathlon Athletics Event) | **ஸ்வப்னா பர்மான்** (Swapna Barman) - பெண்கள் ஹெப்டத்லான் போட்டியில் தங்கப் பதக்கம் |
| • தடகளம் (Athlete) | **ஜின்சன் ஜான்சன்** (Jinson Johnson) - ஆடவர் 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் |

## *முக்கிய தினங்கள்*

| **தினம் (Day)** | **நிகழ்வு (Events)** | **கருத்துரு/முக்கியத்துவம் (Themes / Significance)** |
|---|---|---|
| ஆகஸ்டு 1 | புவி தாங்கத்தகு தினம் (Earth Overshoot Day) | மனித இனத்தின் ஓராண்டுக்கான இயற்கை சார்ந்த தேவையானது அந்த ஆண்டில் பூமியினால் அளிக்கவல்ல அளவை விட அதிகமாகி விடும் நாளே புவி தாங்கத்தகு நாள் ஆகும். |
| ஆகஸ்டு 2 | பிங்காலி வெங்கய்யாவின் 141-வது பிறந்த தினம் | விடுதலைப் போராட்ட வீரரான இவரே இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் ஆவார். |
| ஆகஸ்டு 7 | தேசிய கைத்தறி தினம் (National Handloom Day) | முதலாவது தேசிய கைத்தறி தினம் 2015 ஆகஸ்டு 7 அன்று சென்னையில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது. |
| ஆகஸ்டு 9 | உலகின் பூர்வ குடிகளுக்கான சர்வதேச தினம் (International Day of World's indigeneous Peoples) | "பூர்வ குடிமக்களின் புலம் பெயர்தல் மற்றும் இடப்பெயர்ச்சி" (Indigeneous People migration and Movement) |
| ஆகஸ்டு 10 | உலக உயிர் எரிபொருள் தினம் (World Biofuel Day) | மரபு சார்ந்த ஆற்றல் மூலங்களுக்கு மாற்றாக உயிரி-எரிபொருள் (Bio Fuels) அல்லது பசுமை எரிபொருள் (Green Fuel) போன்ற மரபு சாரா ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் |
| ஆகஸ்டு 12 | உலக யானைகள் தினம் (World Elephant Day) | அழிவின் விளிம்பிலுள்ள ஆப்பிரிக்க மற்றும் ஆசிய யானைகளைப் |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| | | பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் |
| ஆகஸ்டு 12 | சர்வதேச இளைஞர் தினம் (International Youth Day) | "இளைஞர்களுக்கான பாதுகாப்பான பகுதி" (Safe Spaces for Youth) |
| ஆகஸ்டு 13 | உலக உடலுறுப்பு தான நாள் (World Organ Donation Day) | பொதுமக்கள் உடலுறுப்பு தானம் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது. |
| ஆகஸ்டு 19 | உலக மனிதாபிமான தினம் (World Humanitarian Day) | "#NotATarget" |
| | உலக புகைப்பட தினம் (World Photography Day) | உலகெங்கிலும் உள்ள புகைப்படக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இந்த தினமானது கொண்டாடப்படுகிறது. |
| ஆகஸ்டு 20 | உலக கொசுக்கள் தினம் (World Mosquito Day) | மலேரியா நோய்த்தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மலேரியா நோய் பற்றிய ஆராய்ச்சிகளுக்கான நிதியுதவியை அதிகரிப்பதுமே இந்தத் தினத்தின் நோக்கமாகும். |
| ஆகஸ்டு 21 | உலக மூத்த குடிமக்கள் தினம் (World Senior Citizen Day) | மூத்த குடிமக்களின் நிலைமை குறித்த விழிப்புணர்வை வளர்க்கவும் முதுமைக் கூர்வு (Process of Senescence) செயல்பாடு மூலமாக அவர்களுக்கு உதவுவதுமே இந்த தினத்தின் நோக்கமாகும். |
| ஆகஸ்டு 23 | அடிமை வணிகம் ஒழிக்கப்பட்டதனை நினைவு கூறுவதற்கான சர்வதேச தினம் (International Day for the Remembrance of the Slave Trade and it's Abolition) | ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சசார அமைப்பானது (UNESCO - UN Educational, Scientific and Cultural oragnization), அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் நடைபெற்று வந்த அடிமை வணிகத்தினை நினைவு கூறுவதற்காக இந்த நாளினைத் தேர்வு செய்துள்ளது. |
| ஆகஸ்டு 29 | தேசிய விளையாட்டு தினம் (National Sports Day) | இந்தத் தினமானது புகழ்பெற்ற முன்னாள் இந்திய ஹாக்கி அணி வீரர் மேஜர் தயான் சந்தின் (Major Dhyan Chand) பிறந்த நாளின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது. |

- உலகத் தாய்ப்பாலூட்டும் வாரம் (World Breast feeding Week) - ஆகஸ்டு 1 - 7

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS